நகல்

உ

சிவமயம்.

பாலக்காடு,
16-3-24

ஸ்ரீமத் மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் திவ்விய சமுகத்திற்கு அன்புடன் எழுதிக் கொண்டது. இவ்விடம் க்ஷேமம். அவ்விடம் க்ஷேமம் தெரிவிக்கக் கோருகிறேன். தாங்கள் 11-3-24ல் எழுதிய கடிதமும் பெருங்கதைப் பிரதியொன்றும் வந்து சேர்ந்தன.

பெருங்கதை வாசித்து இன்புற எனது பிதா அவர்களுக்கு சாத்ய மாகாதது பற்றி மிகவும் வருந்துகிறேன். பெருங்கதை முகவுரையில் எங்கள் பிதா அவர்களைப்பற்றி எழுதியுள்ளது அவர்கள் பேரில் தங்களுக்குள்ள அன்பின் சிறப்பை விளக்குகிறது.

பெருங்கதைப் பிரதிப் பக்கங்களை ஆங்காங்கு வாசித்துப் பார்த்ததில் தாங்கள் தமிழுலகத்திற்காகச் செய்துள்ள பெருதவி எத்தன்மைத்து என்று எம்போலியரால் எடுத்தாளவியலாது. அதில் அடங்கியுள்ள அபாரமான நூலாராய்ச்சியும் வேறு பல நூல்களிலிருந்து மேற்கோள்களும் ஆராய்ச்சிக் குறிப்புகளும் (critical studies) பார்க்கையாற் வியக்கத் தக்கனவாயிருக்கின்றன.

இன்னும் அநேக நீடூழிகாலமிருந்து போல்வன தமிழ் நூல்கள் பல பதிப்பித்துத் தமிழுலகத்துக்கு உதவுமாறு கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்,
தங்கள்
அன்புள்ள.
பா. சி. கந்தசாமிபிள்ளை

நகல்

12/3.24 (16)

3189

பார்க்கப்பட்டது.
பா.சு. கந்தசாமி பிள்ளை.
16-3-24

Pg. 78, 79.

த.க. Vol 'Q'
Pg. 78-79.

(36)